# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரதமருக்கு கடிதம்!

## முதல் பக்கத் தொடர்ச்சி...

**குமரி - திருவனந்தபுரம்**

**திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்படவில்லை!**

'திருவனந்தபுரம் - கன்னியாகுமரி இடையேயான அகல இரயில் பாதை இரட்டிப்பு' திட்டத்திற்கான 16.86.51 ஹெக்டேர் நில எடுப்புப் பணி முடிக்கப்படாமல் இருப்பது இதற்கு ஒரு பொருத்தமான உதாரணம் என்று சுட்டிக்காட்டி யுள்ள முதலமைச்சர் அவர்கள், இத்திட்டத்திற்கான நில எடுப்பிற்கு உரிய இழப்பீடு வழங்குவதற்குத் தேவையான 289.78 ரூபாய் கோடி நிதியினை இரயில்வே துறை இன்னும் ஒதுக்கவில்லை என்றும், இது தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் ஒரு பெரிய திட்டம் என்றும், இது ஒன்றிய அரசின் திட்டக் கண்காணிப்புக் குழுவின் (PMG) வலைதளத்தின் மூலம் கண்காணிக்கப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார். நிலம் கையகப்படுத்துதலுக்கான நிதியை பகுதி, பகுதியாக வழங்கு வதற்குப் பதிலாக, மொத்தமாக, சரியான நேரத்தில் ஒதுக்குவதன் மூலம், இந்த முக்கியமான திட்டங்களைத் தடையின்றி விரைவாக முடிக்க முடியும் என்று தனது கடிதத்தில் அவர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசு, இரயில்வே திட்டங்களுக்கு உயரிய முன்னுரிமை அளித்து, வலுவான தொரு கண்காணிப்பு வழிமுறையினை ஏற்படுத்தி யுள்ளதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள சிக்கல்களைத் தீர்க்கவும், நிலுவையில் உள்ள திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்துவதை விரைவு படுத்தவும், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரும், போக்குவரத்துத் துறை செயலாளரும் இரயில்வே அதிகாரிகளுடன் தொடர்ந்து மாதாந்திர ஒருங்கிணைப்பு கூட்டங்களை நடத்தி வருவதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**தமிழ்நாட்டிற்கு நிதி**

**ஒதுக்கீடு குறைவாகவே உள்ளது!**

இந்தத் தருணத்தில், சமீபத்திய ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு புதிய இரயில்வே திட்டங்களுக்கான ஒதுக்கீடு ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பது குறித்து தாம் கவலையோடு குறிப்பிட விரும்புவதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இந்திய அளவில் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாகவும், உற்பத்தி மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கான முக்கிய மையமாகவும் விளங்கும் தமிழ்நாடு, தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்குத் தொடர்ந்து கணிசமான பங்களிப்பை வழங்கி வருகிறது என்றும், மேம்பட்ட இரயில் இணைப்பு மற்றும் உள்கட்டமைப்பு மூலம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை மேலும் வலுப்படுத்தும் மகத்தான ஆற்றலை தமிழ்நாடு கொண்டுள்ளதாகவும் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு,

- நில எடுப்பு மற்றும் இழப்பீடு வழங்குவதை விரைவுபடுத்திட ஏதுவாக, அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்குத் தேவையான நிதியை தாமதமின்றி, முழுமையாக, முன்னுரிமை அடிப்படையில் விடுவிக்கவும்;
- இரயில்வே துறையால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள முக்கியமான திட்டங்களான தூத்துக்குடி - மதுரை (அருப்புக்கோட்டை வழியாக) புதிய அகலப்பாதை மற்றும் திண்டிவனம் - திருவண்ணாமலை அகலப்பாதை (ஏற்கெனவே 931.52.96 ஹெக்டேர் நிலத்தைக் கையகப்படுத்த நிருவாக அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன) திட்டங்களை மீண்டும் தொடங்கிடவும், இதற்குத் தேவையான நிதியினை வழங்கிடவும்;
- தமிழ்நாட்டின் பொருளாதார நிலை மற்றும் வளர்ச்சித் தேவைகளுக்கு ஏற்ப, கூடுதலாக புதிய இரயில் திட்டங்களை அனுமதிப்பது குறித்து பரிசீலித்திடவும்;

**தமிழ்நாடு அரசு**

**அனைத்து ஒத்துழைப்பையும் வழங்கும்!**

இந்தியப் பிரதமர் அவர்கள் தலையிட்டு, ஒன்றிய இரயில்வே அமைச்சகத்திற்கு உரிய அறிவுரைகளை வழங்கிட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார். இந்தியப் பிரதமர் அவர்களின் தலையீடு, கூட்டுறவுக் கூட்டாட்சித் தத்துவத்தை வலுப்படுத்துவதோடு, ஒன்றிய மற்றும் மாநில அரசின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க உதவிடும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இரயில்வே திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்க தமிழ்நாடு அரசு முழுமையாக உறுதிபூண்டுள்ளது என்று தெரிவித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இதுதொடர்பாக இந்தியப் பிரதமர் அவர்களிடமிருந்து விரைவில் சாதகமான நடவடிக்கையை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

## சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; மலேயா நாட்டுக்குச் சென்றுள்ள பிரதமர் மோடி, தமிழ்க் கலாச்சாரம் உலகளாவியது - உலகுக்கு இந்தியா வழங்கிய பரிசு தமிழ் - திருவள்ளுவர் மையம் ஒன்றை மலேயாவில் உருவாக்குவோம் - என்றெல்லாம் பேசி இருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; தமிழ் மொழி வளர்ச்சிக்கு எதுவும் செய்யாமல்; உலக வழக்கு அழிந்து ஒழிந்த ஆரியத்தின் மொழியான சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்கு வெண்ணையையும், தமிழ் வளர்ச்சிக்குச் சுண்ணாம்பையும் கொடுத்துவிட்டு; தமிழ் மொழியை ஒன்றிய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்குவது ஒருபுறம் இருந்தாலும், திருக்குறளை தேசிய நூலாக அறிவித்திடக் கூட மனமில்லாமல்; மலேயாவிற்குப் போய் பிரதமர் வாயால் வடை சுட்டிருப்பதை, உலகத்தமிழர்கள் யாரும் குறிப்பாக மலேயா தமிழர்கள் நிச்சயம் புரிந்து கொண்டு, நிராகரிப்பார்கள் !**

### பெரம்பலூர் மாவட்டத்தில்

# கொளக்காநத்தம் ஊராட்சியில் ரூ.6.78 கோடி மதிப்பீட்டில் துணை மின் நிலையம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

*பெரம்பலூர், பிப்,09-*

பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் வட்டத்திற்குட்பட்ட கொளக்காநத்தம் ஊராட்சியில், புதுப்பிக்கப்பட்ட விநியோகத் துறை திட்டத்தின் கீழ் ரூ.6.78 கோடி மதிப்பீட்டில் 33 / 11 kv திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் பணியினை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ந.மிருணாளினி, தலைமையில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன், ஆலத்தூர் முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவர் ந.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற கொள்கையின் அடிப்படையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் பயன் தரும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழ்நாட்டில் மின் பகிர்மானத்தை மேம்படுத்தவும், தடையில்லா மின்சாரம் வழங்கவும் பல்வேறு இடங்களில் புதிய துணை மின் நிலையங்கள் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு திறக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கொளக்காநத்தம் பகுதிக்கு துணை மின் நிலையம் வேண்டும் என அப்பகுதி மக்கள் நீண்டநாள் கோரிக்கை வைத்து வந்த நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் கொளக்காநத்தம் ஊராட்சியில், 33 / 11 kv திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

கூத்தூர் 110/33-11 கி.வோ, புதுக்குறிச்சி 110/22 கி.வோ மற்றும் கூடலூர் 33/11 கி.வோ துணை மின் நிலையத்தில் இருந்து மின் விநியோகம் பெற்று வரும் கொளக்காநத்தம், அயினாபுரம், அணைப்பாடி, சாத்தனூர், சா.குடிக்காடு, இலுப்பைக்குடி, கூடலூர். கொட்டரை. ஆதனூர், பெரியம்மாபாளையம், கரம்பியம் மற்றும் மூங்கில்பாடி மின் பகிர்மானங்களில் உள்ள பொது மக்கள், விவசாயி கள் மற்றும் தொழில் துறை பயன்பாட்டாளர்களுக்கு தரமான மற்றும் நிலையான மின்சார சேவை வழங்குவதில் சிரமம் ஏற்பட்டு வந்தது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் சுமார் 8,000 மின் நுகர்வோர்கள் பயன் பெறும் வகையில் இந்த பணி தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தடையற்ற மின்சார சேவை வழங்கப்படுவதுடன் மின் அழுத்த குறைபாடுகளுக்கு முழுமையாக தீர்வு காணப்படும்.


இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.தேவநாதன், திருச்சி மின் பகிர்மான தலைமை பொறியாளர் எம்.கீதா, மேற்பார்வை பொறியாளர் மேகலா, செயற்பொறியாளர்கள் பரமேஸ்வரி, அசோக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**காளி வி.எஸ்.வாசன்**

**பிப்ரவரி 9 (2007)**



மயிலாடுதுறை வட்டக் கழகத்தின் முதல் துணைச் செயலாளராகவும், நீண்டகாலம் காளி ஊராட்சி மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு அறப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த பெரும்பாலான போராட்டங்களில் கலந்துகொண்டு சுமார் பத்தொன்பது முறை சிறை சென்றவர்.

முரசொலி, நம்நாடு ஆகிய நாளிதழ்களில் சில ஆண்டுகள் சுருக்கெழுத்தராகவும் செய்தியாளராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

### அமைச்சர்கள் தங்கம் தென்னரசு– பி.டி.ஆர்.பழனிவேல்தியாகராஜன் சிறப்புரை!

# மதுரை மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் பி.மூர்த்தி – கோ.தளபதி எம்.எல்.ஏ. – மு.மணிமாறன் அறிக்கை!







*மதுரை, பிப்.9-*

மதுரை மாவட்ட திமுக சார்பில் வருகிற 21 ஆம் தேதி மதுரையில் நடைபெற உள்ள திமுக தெற்கு மண்டல வாக்குச் சாவடி குழுவினருக்கான பயிற்சி மாநாடு தொடர்பாக மதுரை வடக்கு, மதுரை மாநகர் மற்றும் மதுரை தெற்கு மாவட்ட கழகத்தினருக்கான சிறப்பு செயல்வீரர்கள் கூட்டம் இன்று மாலை நடைபெற உள்ளதாகவும் இதில் மண்டல பொறுப்பாளர் அமைச்சர் தங்கம் தென்னரசு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்ற உள்ளதாக வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ, தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளனர் அதன் விபரம்

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெல்வோம் இருநூறு படைப்போம் வரலாறு என சூளுரைத்து கடந்த சில மாதங்களாக வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் மீண்டும் வரலாறு காணாத வகையில் வெற்றி பெற்று மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைவதை உறுதி செய்திடும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறார்.

அதன் ஒரு முக்கிய பங்காக வருகிற பிப்ரவரி-21ம் தேதி கழக வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA-2), 100 வாக்காளர்களுக்கு ஒருவர் என நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (BLC) மற்றும் வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (BDA) ஆகியோரைத் தேர்தல் பணிக்கு முழுமையாகத் தயார் செய்யும் வகையில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" - வாக்குச்சாவடிக் குழுவினருக்கான பயிற்சி மாநாடு தெற்கு மண்டலம் மாநாடு மதுரையில் நடைபெறும் என அறிவித்திருந்தார்.

இதுவரை கழகத் தலைவர் அறிவித்த அனைத்து நிகழ்ச்சிகளையும் சிறப்பாக நடத்திக் காட்டிய மதுரை மாவட்ட திமுக இந்த மாநாட்டையும் வெற்றி மாநாடாக அமைக்க வேண்டும் என்பதற்கான செயல்வீரர்கள் கூட்டம் இன்று (09.02.2026 திங்கள் கிழமை) மாலை 5 மணியளவில் மதுரை உத்தங்குடியில் அமைந்துள்ள ஜே எஃப் ஏ லக்கி பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் கழக தேர்தல் மண்டல பொறுப்பாளர் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்ற உள்ளனர்.

எனவே இந்த முக்கியம் வாய்ந்த இந்த செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மதுரை வடக்கு, மதுரை மாநகர் மற்றும் மதுரை தெற்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என அனைவரும் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டும் என மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ, மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்



கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலம் நகரத்தில் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கினார். உடன் நகர மன்றத் தலைவர் மருத்துவர். சங்கவி முருகதாஸ் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.